සියලුම හිමිකම් ඇවිරිනි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020

தரம் : 10

**தமிழ் மொழியும் இலக்கியமும்** / දෙමළ භාෂාව - I நேரம்: 1 மணித்தியாலம்

---

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
- 1 – 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3),(4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.

---

- **எல்லா வினாக்களுக்கும் மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

- **தடித்த சொல் பற்றியதற்கு விடை தருக.**

1. வண்டோ கானத் திடையிருந்து **வண்டு** என்பதன் பொருள்.
   1) கோகிலம் 2) மயில் 3) அலி 4) அளி

2. மிக்காரைச் சேர்த்தல் மிகமான முன் இனிதே. **மிக்கார்** என்பதன் கருத்து.
   1) அன்புள்ளவர் 2) சந்தமானவர் 3) பரிவுள்ளவர் 4) அறிவுடையவர்

3. சட்ட நிபுணர்களான வழக்கறிஞர்கள். **வழக்கறிஞர்கள்** என்பதன் கருத்து.
   1) சட்டவல்லுநர் 2) நண்பர் 3) உறவினர் 4) மேதாவிகள்

4. பனையோலைப் பாயிற் படுத்துறங்கும். **உறங்கும்** என்பதன் எதிர்கருத்துச் சொல்.
   1) சயனம் 2) துயிலும் 3) விழிக்கும் 4) படுக்கும்

5. வீடு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர். **அஞ்சுவோர்** என்பதன் எதிர்கருத்துச் சொல்.
   1) துணிவோர் 2) பணிவோர் 3) ஏற்றுவோர் 4) இரங்குவோர்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

6. இன்று சமூகத்தில் “FOLKLORE” என்பதன் தமிழ்க் கலைச் சொல்.
   1) நெகிழ் தட்டு 2) நாட்டாரியல் 3) குறுநாவல் 4) சிறுகதை

7. பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற சொற்களின் இணைவு
   1) நெல் - அரிசி 2) கற்றாழை - சோறு
   3) அவரை - பருப்பு 4) தோடை - சதை

8. குதிரை, தானியப்பொடி, பெரிய என்னும் பொருள்களைத் தரும் சொல்.
   1) பரி 2) கா 3) திரு 4) மா

9. அரச சபையில் அரசனுக்கு ஆலோசனை வழங்குபவர்.
   1) கட்டியக்காரர் 2) அமைச்சர் 3) விகடகவி 4) புலவர்

10. பெண் யானை பிடி எனப்படுவது போல பெண் மான்
    1) கரி 2) பிணை 3) பேடு 4) கலை

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது



kalvi.lk

11. பின்வருவனவற்றுள் இணைமொழி அல்லாதது
1) பச்சைப்பசேல் 2) தோட்டந்துரவு 3) சூதுவாது 4)இன்னார் இனியார்

12. ஒருவரின் அறிவுக்கூர்மையை சுட்டுவதற்கு கையாளப்படும் அருஞ் சொற்றொடர்,
1) ஒல்காப் பெரும் புகழ் 2) கருவிலே திருவுடையோன்
3) நுண்மான் நுழைபுலம் 4) சொல்லின் செல்வர்

13. வறியவர்களுக்கும், அங்கவீனர்களுக்கும், முதியோருக்கும் உண்டியும் உறையுளுமளித்து ஆதரிக்கும் இடம்,
1) ஆச்சிரயம் 2) மடம் 3) அன்னசாலை 4) ஆதுலர்சாலை

14. ஒரு செயலைச் செய்வதற்குரிய அடிப்படைத் தகுதி இல்லாதவரால் அச் செயலைச் சிறிதேனும் செய்ய இயலாது என்பதைக் குறிக்கும் பழமொழி
1) அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
2) அச்சம் இல்லாதவன் அம்பலம் ஏறுவான்.
3) ஆடத் தெரியாதவனுக்கு அரங்கு கோணல்.
4) கனவிற் கண்ட பணம் செலவுக்கு உதவுமா?

15. கையும் மெய்யுமாகப் பிடிபட்ட திருடன் திருதிரு என விழித்தான் ‘திருதிரு’ என்பது,
1) அடுக்குத்தொடர் 2) இணைமொழி
3) அடுக்கிடுக்குத்தொடர் 4) இரட்டைக்கிளவி

16. வீட்டின் படுக்கையறையில் பீரோ உள்ளது. இங்கு ‘பீரோ’ என்பது.
1) ஒல்லாந்து மொழி 2) பிரான்சிய மொழி
3) ஆங்கில மொழி 4) போர்த்துக்கேய மொழி

17. மிகுந்த கவனத்தோடு பாதுகாத்தல் என்னும் பொருள் தரும் உவமைத் தொடர்.
1) கண்ணை இமை காப்பது போல 2) ஓடும் புளியம் பழமும் போல
3) கிணற்றுத் தவளை போல 4) தாமரை இலைத் தண்ணீர் போல

18. குவளை மலர் போன்ற கரு நீலக் கண்கள். கரு நீலக் கண்கள் என்பது எவ்வகைத்தொகை
1) உவமைத்தொகை 2) உம்மைத்தொகை
3) பண்புத்தொகை 4) வேற்றுமைத்தொகை

19. இரு சொற்களில் ஒன்றை தனியாக பிரிக்கும் போது பொருள் தராது அமைவது
1) அடுக்குத் தொடர் 2) இணைமொழி
3) சிலேடை 4) இரட்டைமொழி

20. சமூக வழக்கில் ‘கோல்’ என்ற சொல் குறிப்பது.
1) தடி 2) சாணம் 3) சாக்கு 4) பரண்

21. ‘ச’ என்ற எழுத்து உச்சரிப்பில் வேறுபடும் சொல்
1) ஆட்சி 2) பாசி 3) சனம் 4) சோறு

22. பின்வருவனவற்றுள் பகுபதம்
1) ஆடு 2) சிங்கம் 3) ஆடல் 4) கரம்

23. பின்வருவனவற்றுள் ஆக்கப் பெயரடை
1) வேகமாக 2) அழகான 3) விரைவாக 4) மெல்ல



kalvi.lk

24. அனுபவப் பேரைப் பொருளாகக் கொண்ட வேற்றுமை
1) மூன்றாம் வேற்றுமை
2) நான்காம் வேற்றுமை
3) ஐந்தாம் வேற்றுமை
4) ஆறாம் வேற்றுமை

25. திரிதல் விகாரப்புணர்ச்சி இடம்பெற்ற சொல்.
1) கற்குகை
2) நீலவானம்
3) பலாப்பழம்
4) மாமரம்

26. பெயர்ப்பயனிலை கொண்டமைந்த வாக்கியம்
1) அவன் போனான்
2) அவன் ஒரு பாடகன்
3) வீசியது காற்று
4) கல்லை உடை

27. சிறுவர்களிடையே ஒற்றுமை ஓங்கட்டும். இதில் வரும் ஓங்கட்டும் என்பது.
1) குறிப்பு வினை
2) வியங்கோள் வினை
3) ஏவல் வினை
4) எதிர்மறை வினை

28. இம்முறை கடும்மழை பெய்தது. குளங்கள் நிறையவில்லை இவ்வரு வாக்கியங்களையும் இணைக்கப்பொருத்தமான இணைப்பிடைச் சொல்
1) ஆகவே
2) எனவே
3) ஆயினும்
4) அத்துடன்

29. பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றெகுதியை தெரிவு செய்க.
1) பெயர்ச் சொல் - மரம், இலை, கல்
2) வினைச்சொல் - ஓடினான், எழுந்தான், பெய்யாது
3) பெயரடை - சிறிய, அழகான, வரைந்த
4) வினையடை - அழுது, பெய்த, விழுந்து

30. பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியை தெரிவு செய்க.
1) உவமைத்தொகை - மதிமுகம், பிறைநுதல், முத்துப்பல்
2) உம்மைத்தொகை - சேரசோழர், பால்பழம், இரவுபகல்
3) வேற்றுமைத்தொகை - வீடு கட்டினான், வைரமோதிரம், பொற்காப்பு
4) வினைத்தொகை - கார்மேகம், குளிர்நிலவு, கடிநாய்

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. அரசாங்கத்தால் பொருட்களுக்கான விலைக்குறைப்புப் பற்றிய .................................. அளிக்கப்பட்டது.
1) உடன்படிக்கை 2) உத்தரவாதம் 3) ஒப்பந்தம் 4) அறிக்கை

32. வெள்ளப் பெருக்கினால் இடம் பெயர்ந்த மக்களுக்கு அரசாங்கம் ....................... வழங்கியது.
1) ஊதியம் 2) மானியம் 3) நிவாரணம் 4) பரிசு

33. நாட்டில் காணமல் போனோர் பற்றி விசாரிப்பதற்காக ஜனாதிபதியால் ........................... நியமிக்கப்பட்டது.
1) ஆணைக்குழு 2) விசாரணைக்குழு 3) தேடுதல்குழு 4) வேட்பாளர்குழு

34. ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் புகழுரை ........................... எனப்படும்.
1) முன்னுரை 2) அணிந்துரை 3) வாசகர் உரை 4) வேற்றுரை



kalvi.lk

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35. திருக்குறளை தமிழர்கள் மாத்திரமின்றி
    1) பிறர் விரும்புவதில்லை
    2) பிறரும் விரும்பிக் கற்கின்றார்கள்
    3) பிறராலும் விரும்பிக் கற்கப்படுகிறது
    4) பிறராலும் விரும்பிக் கற்கிறார்கள்

36. நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மக்கள் கூட்டம்.
    1) அலை மோதின
    2) அலை மோதினர்
    3) அலை மோதியது
    4) அலை மோதினார்கள்

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

படுக்கும் மெத்தையில் பஞ்சை இழுக்கிறாய்
பாதவிரல்நகம் பல்லால் கடிக்கிறாய்
அடுக்கும் கறியை அலக்கழிக்கிறாய்
அல்லும் எல்லும் இந்தப் பொல்லாங்கு செய்கிறாய்

37. விரல்நகம் என்பது எவ்வகைத் தொகை?
    1) வேற்றுமைத்தொகை
    2) பண்புத்தொகை
    3) வினைத்தொகை
    4) உம்மைத்தொகை

38. இப்பாடலில் எல் என்பது எதனைக் குறிக்கிறது?
    1) இரவு
    2) கங்குல்
    3) நிசி
    4) பகல்

39. அல்லும் எல்லும் என்பது எவ்வகைத் தொடர்?
    1) இரட்டை மொழி
    2) அடுக்குத் தொடர்
    3) இணைமொழி
    4) அடுக்கிடுக்குத் தொடர்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) அவனுக்குப் பிற உயிர்களுக்கு இல்லாத பகுத்தறிவு இருக்கின்றது.
ஆ) பஞ்ச பூதங்களும் அவன் வசப்பட்டு ஊழியஞ் செய்து கொண்டு நிற்கின்றன.
இ) உயிரினங்களுக்குள்ளே ஆறறிவு படைத்த மனிதனே சிறப்பு மிகுந்தவனாக விளங்குகின்றான்.
ஈ) மனிதன் தன் பகுத்தறிவைத் துணையாகக் கொண்டு அரிய பல காரியங்களை நிறைவேற்றி வருகின்றான்.
உ) மிகச் சிறிய அணுவுக்குள்ளும் அவனுடைய கண் ஊடுருவிச் சென்று விடும்.

1) உ,ஆ,இ,ஆ,ஈ
2) ஆ,இ,அ,உ,ஈ
3) ஈ,ஆ,இ,அ,உ
4) இ,அ,ஈ,ஆ,உ

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது



kalvi.lk

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.

# GRADE 6-11

# STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.



Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)

**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page